# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 218/ந/2025, நாள் 31.12.2025

P. தர்மலிங்கம்
பொள்ளாச்சி, – முறையீட்டு மனுதாரர்
கோயம்புத்தூர் மாவட்டம்.

நகராட்சி ஆணையர்,
பொள்ளாச்சி நகராட்சி, – எதிர்மனுதாரர்
கோயம்புத்தூர் மாவட்டம்.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, ACMA மில் வீதி, கதவு எண்.19/51 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P. தர்மலிங்கம் என்பவரது 18.06.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.06.2025 அன்று பெறப்பட்டு, 218/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, ACMA மில் வீதி, கதவு எண்.19/51 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P. தர்மலிங்கம் என்பவரின் 18.06.2025 நாளிட்ட புகார் மனுவுடன் இணைத்தனுப்பட்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தனிப்பிரிவுக்கு முகவரியிடப்பட்டுள்ள 26.05.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் –

“பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான வெங்கடேசா காலனி, தமிழ் தென்றல் தி.ரு.வி.க. தினசரி காய்கறி வியாபார சந்தையில் உள்ள 50 செண்ட் இடத்தில் நகராட்சியின் மூலம் கட்டப்பட்டுள்ள கடைகளில் வியாபாரம் செய்வோரிடம் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் மற்றும் நுழைவுவாயில்களில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (வருடம் 1–க்கு) குத்தகைக்கு விடுவதற்கான பொது ஏலம் நடைபெற கடந்த 21.04.2025 அன்று ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. ந.க.எண்.6823/2024/அ6– அதில் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் வரை உள்ள கால அளவிற்கு அனுபவிக்கும் பாத்தியத்தை ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் நாள் 08.05.2025 முற்பகல் 11.00 மணிவரை மூடி முத்திரை இடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படும் எனவும், அதே நாளில் முற்பகல் 11.30 மணிக்கு பகிரங்க ஏலம் விடப்படும். எலம் முடிந்தவுடன் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும்.

ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொள்பவர்கள் பொறுப்புத் தொகை மற்றும் கூடுதல் பொறுப்பு தொகையினை ஆணையாளர், பொள்ளாச்சி நகராட்சி என்ற பெயரில் வரைவேலையாக (Demand Draft) அல்லது நகராட்சி கருவூலத்தில் தொகை செலுத்திய ரசீது நகலுடன் ஏல தினத்திற்கு முதல் வேலை நாள் 07.02.2025 மாலை 5 மணிக்கு நகராட்சியில் வழங்கி அதற்கான அத்தாட்சியினை பெற்றுக் கொள்ள வேண்டும் என ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் ஏலம் / ஒப்பந்தப் புள்ளி கலந்து கொள்வதற்காக 06.05.2025 அன்று இரசீது எண்.076/ PMC/14/25-26/0001274 என்ற எண்ணில் வைப்புத் தொகை ரூ.1,00,000/– மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.6,00,000/– என, ஆகமொத்தம் ரூ.7,00,000/– செலுத்தி மேலும் ஏலத்தில் கலந்து கொள்வதற்கான ஆவணங்களை சீலிட்ட

கவரில் வைத்து ஏலத்தில் (டெண்டர்) பங்கு கொண்டு அதிகபட்ச தொகையாக ரூ.22,00,104/– (ரூபாய் இருபத்து இரண்டு லட்சத்து நூற்றி நான்கு) குறிப்பிட்டு டெண்டர் படிவத்தினை காலை 10.30 மணிக்கு நகராட்சியின் முதல் தளத்தில் உள்ள வருவாய் அலுவலகத்தில் உள்ள அறையில் வைக்கப்பட்டிருந்த டெண்டர் பெட்டியில் போட்டேன். அதில், நான் உட்பட நான்கு பேர்கள் மட்டுமே கலந்து கொண்டோம். ஏல நேரமானது காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரை ஆகும். நான் அப்பொழுது ஏலத்திற்கு சம்பந்தமில்லாத வெளி ஆட்கள், அந்த அறைக்கு வெளியில் இருந்து கொண்டு எப்படி நீ டெண்டர் போடுவாய், வெளியில் வா என்று சப்தம் இட்டு தகராறு செய்ததால், நான் அறையில் இருந்து வெளியில் வந்து நின்ற பொழுது, அங்கும் என்னிடம் ஆபாசமாக பேசியதால், கீழ்தளத்தில் உள்ள நகராட்சி கமிஷனரிடம் புகார் அளிக்க வந்த போழுது, பொள்ளாச்சி நகர திமுக துணை செயலாளராக இருக்கும் ச. தர்மராஜ் மற்றும் அந்த நபர்கள் திமுக நகர செயலாளர் மற்றும் அவரது மனைவியான நகரமன்றத் தலைவரை மீறி எப்படி நீ ஏலத்தில் பங்கு கொள்ளலாம் என்றும், ஆபாசமாகவும் திட்டி மிரட்டல் விட்டு ஏலம் நடக்கும் அறைக்குள் என்னை விடவில்லை. இதனால் அங்கிருந்து பயந்து நான் வெளியேறி விட்டேன்.

பின்னிட்டு ஏலம் (டெண்டர்) நடைபெற்ற அந்த அறையை வேற யாரையும் உள்ளே விடாமல் என்னுடன் பங்கு கொண்ட ச. தர்மராஜ், கோ.சி. மணி, ஆறுமுகசாமி மற்றும் N. P ஆனந்தகுமார் ஆகிய நால்வரும் மற்றும் நகராட்சி அதிகாரிகளும் கதவை மூடிக் கொண்டு டெண்டர் பெட்டியை திறந்து நான் குறிப்பிட்டிருந்த தொகையை விட சற்று அதிகமாக ரூ.22,10,000/– (ரூபாய் இருபத்து இரண்டு லட்சத்து பத்து ஆயிரம் மட்டும்) எனக் குறிப்பிட்டு சி. ஆறுமுகம் த/பெ. சிட்டையன் CTC காலனி, பொள்ளாச்சி என்பவருக்கு ஒப்பந்ததாரராக அறிவித்துள்ளார்கள். இச்செயல் சட்ட விரோதமானதாகும். திமுக நகர செயலாளர் மற்றும் நகராட்சித் தலைவர் ஆகியோரது தலையீட்டின் பேரிலேயே இச்செயல் நகராட்சி அதிகாரிகள் உடந்தையுடன் நடந்துள்ளது. என்னிடம் இந்த ஏலம் குறித்து நகராட்சி அதிகாரிகளால் எவ்விதமான கையெழுத்தும் பெறப்படவில்லை. நடைபெற்று முடிந்த இந்த ஏலம் (டெண்டர்) சட்ட விரோதமானது. இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் நகராட்சியில் வைக்கப்பட்டுள்ள சிசிடிவி கேமராவில் பதிவாகியுள்ளது.

எனவே, தாங்கள் எனது இந்த புகார் மனுவினை பரிசீலித்து கடந்த 08.05.2025 அன்று நடைபெற்ற ஏலம் (டெண்டர்) ரத்து செய்து அதிகபட்ச தொகை குறிப்பிட்டிருந்த (ரூ.22,00,104/–) எனக்கு குத்தகையை ஒதுக்கீடு செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். "என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 25.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பொள்ளாச்சி நகராட்சி ஆணையரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் 15.07.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.2462/2025/அ6–ன் வழி மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில் –

"பொள்ளாச்சி நகராட்சி, வெங்கடேசா காலனி, மேல்நிலை குடிநீர் தேக்கத் தொட்டி வளாகத்திற்கு கிழக்கே உள்ள தமிழ் தென்றல் திரு.வி.க தினசரி காய்கறி வியாபார சந்தையில் உள்ள 50 சென்ட் இடத்தில் நகராட்சியின் மூலம் கட்டப்பட்டுள்ள கடைகளில் வியாபாரம் செய்வோரிடம் கட்டணம் வசூல் மற்றும் நுழைவாயில்களில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் இனத்திற்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள் 21.04.2025–ன்படி இக்குத்தகை இனத்திற்கு 08.05.2025 முற்பகல் 11.00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டும், அதே நாளில் 11.30 மணிக்கு பகிரங்க பொது ஏலம் விடவும், ஏலம் முடிவுற்றவுடன் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கவும், ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் பொறுப்புத் தொகை மற்றும் கூடுதல் பொறுப்புத் தொகையினை ஏல தினத்திற்கு முதல் வேலை நாள் 07.05.2025 மாலை 5.00 மணிக்குள் நகராட்சி கரூவூலகத்தில் செலுத்திட தெரிவித்து ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டு, செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம் தினசரி நாளிதழில் 23.04.2025 அன்று பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

மேற்காண் குத்தகை இனத்திற்கு 08.05.2025 முற்பகல் 11.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டு அன்று காலை 11.00 மணிக்கு பூட்டி சீலிடப்பட்டுள்ளது. ஏலத்திற்கு வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை யாரும் செலுத்தப்படாத நிலையில், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதன்படி காலை 11.30 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெட்டி ஏலம் நடத்தும் அலுவலரால் அங்கு இருந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ள நபர்களின் முன்னிலையில் தான் திறக்கப்பட்டுள்ளது. புகார்தாரர்

திரு. தர்மலிங்கம் அவர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் வருகை பதிவேட்டில் கையொப்பமிடப்பட்டுள்ளது. இதில் தகுதியன கீழ்காணும் 4 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பெயர் | ஆண்டு குத்தகை தொகை |
|---|---|---|
| 1. | P. தர்மலிங்கம் | ரூ. 22,00,104/– |
| 2. | K. பாலகிருஷ்ணன் | ரூ. 16,00,003/– |
| 3. | ஆறுமுகம் த/பெ. சித்தையன் | ரூ. 22,10,000/– |
| 4. | S. மணிகண்டன் | ரூ. 18,12,000/– |

மேற்காண் ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. ஆறுமுகம் என்பவரால் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், புகார்தாரர் குறிப்பிட்டது போல் ஏலம் நடக்கும் அறைக்குள் அன்னாரை அனுமதிக்கப்படவில்லை என்றும், திரு. ச.தர்மராஜ், கோ.சி.மணி, ஆறுமுகசாமி மற்றும் N.P.ஆனந்தகுமார் ஆகிய நால்வரும் மற்றும் நகராட்சி அதிகாரிகளும் கதவை மூடிக்கொண்டு டேண்டர் பெட்டியை திறந்து முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள தொகையினை விட சற்று அதிகமாக அதாவது ரூ.22,10,000/– என ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ளதாக கூறுவது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.

அதே நேரத்தில், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை அனைத்து இனங்களுக்கான பொது நிபந்தனைகள் பத்தி எண்.42–ன்படி ஒப்பந்த புள்ளியில் / ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் மறு ஏலம் கோர கீழ்கண்டவாறு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

“எவரேனும் ஏலம் / டெண்டரில் விடப்பட்ட இனத்தினை கூடுதலாக கேட்க விரும்பினால் டெண்டர் / ஏலம் முடிவுற்ற 24 மணி நேரத்திற்குள் தனது விருப்பத்தை எழுத்து வாயிலாக ஆணையருக்கு (வேலை நாளில்) தெரிவித்து உச்ச ஏல உரிமத் தொகையாக முந்தைய ஏலம் கோரிய தொகையுடன் 25% சதவிகிதம் சேர்த்து வங்கி வரைவோலையாக செலுத்த வேண்டும். மறு ஏலத்தின் பொழுது முந்தைய ஏலத்தொகையுடன் 25% சதவிகிதத் தொகையும் சேர்த்துக் கணக்கிட்டு மொத்தத் தொகை ஆரம்ப கேள்வியாக நிர்ணயிக்கப்பட்டு, இதிலிருந்து ஏலம் துவக்கப்படும்.”

மேற்கண்டவாறு விதிகளில் வழிவகை செய்யப்பட்டும் புகார்தாரர் 24 மணி நேரத்திற்குள் விருப்பக்கடிதத்தினை வழங்கி முந்தைய ஏலத்தொகையுடன் 25% சேர்த்து வங்கி வரைவோலை ஏதும் சமர்ப்பிக்கவில்லை. மேலும் ஆணையர் அவர்களிடமோ அல்லது ஏலம் நடத்தும் அலுவலரிடமோ ஒப்பந்தப்புள்ளி குறித்து எவ்வித முறையீடும் அன்றைய தினம் புகார்தாரரால் அளிக்கப்படவில்லை. மேற்கண்ட சூழ்நிலையின் அடிப்படையில், அன்னாரது மகன் D.அவினாஷ் கார்த்திக் மேற்கண்ட குத்தகை இனத்தினை கடந்த ஏலத்தில் பெற்று நடத்தி வந்த நிலையில், தற்போது அன்னாருக்கு கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்திலும், காழ்புணர்ச்சியிலும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்தி புகார் அளித்து வருகிறார். புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளதன்படி ஒப்பந்தப்புள்ளியில் எவ்வித விதிமீறல்கள் நடைபெறாததால் அன்னாரது முறையீடு நிராகரிக்கப்பட்டு பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் கடிதம் நக.எண்.2462/2025/அ6, நாள்.11.06.2025–ன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இம்முறையீடு தொடர்பாக புகார்தாரால் மாண்பமை உயர்நீதிமன்றத்தில் W.P.No. 21031/2025 தொடர்ந்திருந்தார். இவ்வழக்கு 16.06.2025 அன்று விசாரணை வந்தபோது மேலே விவரிக்கப்பட்ட விவரங்கள் மாண்பமை நீதிமன்றம் முன்வைக்கப்பட்டது. அதனை ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்து உத்திரவிட்டது. மேலும் முறையீட்டாளரால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களுக்கு புகார் அனுப்பப்பட்டதில் விரிவான அறிக்கை கோரப்பட்டு பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.2462/2025/அ6 நாள் 11.06.2025–ன் வழி விரிவான அறிக்கை அளிக்கப்பட்டு அறிக்கை நகல் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் முறையீட்டாளர் திரு. தர்மலிங்கம் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் W. P.No. 23451/2025 மீண்டும் வழக்கு தொடர்ந்ததில் அவ்வழக்கில் 26.06.2025 அன்று வழங்கப்பட்ட இடைக்கால தீர்ப்பில் இருக்கும் நிலையிலேயே தொடர நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஆணையை நிறைவேற்றும் பொருட்டு உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி சமர்ப்பித்துள்ள திரு. ஆறுமுகம் என்பவரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்பது தொடர்பாக மன்றப் பொருள் நிறுத்தி வைக்கப்பட்டு, தற்சமயம் இக்குத்தகை உரிமம் நகராட்சி பணியாளர்களை கொண்டு வசூல்

பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. " எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரர் புகாராக தெரிவிக்கப்பட்டுள்ள தமிழ்தென்றல் திரு.வி.க.தினசரி காய்கறி வியாபார சந்தை ஏலம்/ ஒப்பந்தபுள்ளி முறைகேடு தொடர்பாக மனுதாரரால் மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P.No.23451 of 2025 & W.M.P.Nos.26317 and 26319 of 2025–ன் மீது 24.07.2025–ல் வழங்கப்பட்ட தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது.

"5 xxxxx

6. From the CCTV footage, it was clear that the petitioner left the auction premises voluntarily at 11.00 a.m. Since the petitioner voluntarily abstained from the tender process, the respondents cannot be faulted for opening the sealed tenders and confirming the highest bid of the 2nd respondent. As rightly contended by the respondents, the petitioner had an opportunity to offer 25% more than the highest bid of the 2nd respondent within 24 hours of the conclusion of the auction, as contemplated under Rule 42 of the Act. However, the petitioner failed to exercise the option. Under the facts and circumstances of the case, **I find no merit in the writ petition and hence, the same is dismissed.**

7. It is submitted by the learned counsel for the petitioner that the tender deposit amount Rs.7,00,000/- (Rupees Seven Lakhs), retained by the respondents, may be directed to be returned to the petitioner.

Since the writ petition dismissed, the respondents are directed to return the tender deposit amount of Rs.7,00,000/- (Rupees Seven Lakhs), to the petitioner, within a period of four weeks, from the date of receipt of a copy of this order. No costs. consequently, the connected miscellaneous petitions are closed."

5. மேற்கண்டவாறு வழக்கு முடிக்கப்பட்டுள்ளதால், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் ஆகியோரை 09.10.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 26.09.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் 09.10.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை. மனுதாரரின் 08.10.2025 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரின் வழக்கறிஞர் திரு. கோபிநாத் என்பவரை விசாரணையில் ஆஜராக அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, மனுதாரரின் வழக்கறிஞர் 09.10.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் புகார் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 24.07.2025 அன்று அளித்த W.P.No. 23451 of 2025 and W.M.P.Nos. 26317 and 26319 of 2025 தீர்ப்பு பற்றிய தகவல் எனக்கு மனுதாரரால் தெரிவிக்கப்படவில்லை. மேற்படி தீர்ப்பு குறித்து இன்றைய விசாரணையில் தெரிந்து கொண்டேன். ஆகையினால் என்னால் மனுதாரரின் புகார் தொடர்பாக மேற்கொண்டு எதுவும் கூற இயலவில்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் திரு. P. தர்மலிங்கம் என்பவர் தனது உடல்நிலை கருதி இன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை. எனவே, மனுதாரருக்கு மேலும் ஒரு வாய்ப்பளித்து விசாரணைக்கு அழைக்க வேண்டுமாய் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

7. பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.2462/2025/அ6, நாள் 07.10.2025 நாளிட்ட கடிதத்தில் 09.10.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு வருகை புரியவுள்ளதால், மாவட்ட ஆட்சித் தலைவர் கோவை அவர்களால் அன்றைய தினம் அனைத்து துறை சார்ந்த தலைமை அலுவலருக்கு ஆய்வுக் கூட்டம் நடத்தப்படவுள்ளதால், 9.10.2025 அன்று நடைபெறவுள்ள

விசாரணையில் பொள்ளாச்சி நகராட்சி மேலாளர் (பொறுப்பு) மற்றும் வருவாய் அலுவலர் திரு. தி. சண்முகராஜா என்பவரை ஆஜராக அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து 09.10.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் பொள்ளாச்சி நகராட்சி வருவாய் ஆய்வாளர் மற்றும் மேலாளர் (பொ) ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள தினசரி காய்கறி வியாபார சந்தையில் நகராட்சி மூலம் கட்டப்பட்டுள்ள கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமம் 08.05.2025–ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மனுதாரர் குறிப்பிட்டிருந்த தொகையான ரூ.22,00,104/–யை விட அதிகமாக ரூ.22,10,000/– குறிப்பிட்டிருந்த திரு. சி. ஆறுமுகம் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கியுள்ளதில் தவறு ஏற்பட்டுள்ளது என்பதற்கு தகுந்த முகாந்திரம் எதுமில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மனுதாரர் திரு. P. தர்மலிங்கம் என்பவரது மனு தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் பொள்ளாச்சி நகராட்சியினரால் சமர்ப்பிக்கப்பட்ட 08.05.2025 அன்று பதிவு செய்யப்பட்ட CCTV Footage–ஐ ஆய்வு செய்து, அதனடிப்படையில் W. P.No. 23451 of 2025 and W.M.P.Nos. 26317 and 26319 of 2025–ல் 24.07.2025 அன்று அளித்த தீர்ப்பின் அடிப்படையில் மனுதாரரின் குற்றச்சாட்டான தன்னை ஏலத்தில் கலந்து கொள்ள தடுக்கப்பட்டதாக கூறுவது நிரூபணமாகவில்லை. எனவே மனுதாரரின் மனு மேற்படி நீதிப்பேராணையின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரரிடம் நகராட்சியால் பெறப்பட்ட வைப்புத்தொகையான ரூ.7,00,000 (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) மனுதாரருக்கு ஆணை பெறப்பட்ட நாளிலிருந்து நான்கு வாரங்களுக்குள் திருப்பி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

நகராட்சியின் சார்பில் மனுதாரருக்கு மேற்படி வைப்புத்தொகை திருப்பியளிப்பது தொடர்பாக திரு. P. தர்மலிங்கம் அவர்களிடமிருந்து 15.09.2025–ல் மனு பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேல்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மனுதாரருக்கு 15.10.2025–க்குள் ஏல வைப்புத்தொகையான ரூ.7,00,000 (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) நகராட்சியால் வழங்கப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.".

8. மனுதாரரின் வழக்கறிஞர் 09.10.2025 தேதிய விசாரணையில் மனுதாரரின் உடல்நிலை கருதி ஆஜராகாததால், மனுதாரருக்கு மேலும் ஒரு வாய்ப்பளிக்க கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து , மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் ஆகியோரை 27.11.2025 அன்று கோயம்புத்தூர் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.11.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

9. மனுதாரர் 27.11.2025 அன்று கோயம்புத்தூர் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான தமிழ் தென்றல் திரு.வி.க.தினசரி வியாபார சந்தையில் 50 சென்டில் கட்டப்பட்டுள்ள நகராட்சிக்கு சொந்தமான கடைகளில் வியாபாரம் செய்வதற்கான உரிமம் மற்றும் நுழைவு வாயில் கட்டணம் பெறுவதற்கான உரிமம் ஆகியவற்றிக்கு 3 ஆண்டுகளுக்கான ஏலம் விடுவதற்கான குத்தகை அறிவிப்பு 21.04.2025 அன்று வெளியிடப்பட்டது. இந்த ஏல நடவடிக்கை சட்டவிரோதமானது. இதில் முறைகேடு நடந்துள்ளது.

மேலும் எனக்கு கொடுக்க வேண்டிய ஒப்பந்த முன்வைப்புத் தொகை ரூ.7,00,000/– எனக்கு வழங்கப்பட்டுவிட்டது என்பதை இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் வேண்டித் தெரிவித்துக்கொள்கிறேன்.".

10. எதிர்மனுதாரரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் சார்பாக ஏற்கனவே இப்புகார் மனு தொடர்பாக ஆஜரான பொள்ளாச்சி நகராட்சி வருவாய் அலுவலர் (ம) நிர்வாக அலுவலர் (பொறுப்பு) 27.11.2025 அன்று கோயம்புத்தூர் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு

உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"இம்முறையீடு தொடர்பாக மனுதாரர் உயர்நீதிமன்றத்தில் W. P.No. 23451/2025–ன் கீழ் வழக்கு ஒன்று தொடர்ந்தார். இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு அத்தீர்ப்பில் மனுதாரருக்கு ஏல முன் வைப்புத் தொகையை திரும்ப வழங்கிட உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படியே மனுதாரருக்கு செலுத்தப்படவேண்டிய ஒப்பந்தப்புள்ளி முன்பணம் ரூ.7,00,000/– 14.10.2025 அன்று வழங்கப்பட்டுவிட்டது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.".

11. மனுதாரரின் மனு, வாக்குமூலம் மனுதாரர் சார்பாக விசாரணைக்கு ஆஜரான வழக்கறிஞரின் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், பொள்ளாச்சி நகராட்சி வருவாய் அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர் (பொறுப்பு) அவர்களின் வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

‘‘பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான தமிழ் தென்றல் திரு.வி.க.தினசரி காய்கறி வியாபார சந்தையில் 50 சென்டில் கட்டப்பட்டுள்ள நகராட்சிக்கு சொந்தமான கடைகளில் 3 ஆண்டுகளுக்கு வியாபாரம் செய்வதற்கான உரிமம் மற்றும் நுழைவு வாயில் கட்டணம் வசூல் செய்வதற்கான உரிமம் ஆகியவற்றிக்கு ஏலம் விடுவதற்கான குத்தகைக்கான பொது ஏலத்தில் ரூ.7,00,000/– செலுத்தி மனுதாரர் கலந்து கொண்டுள்ளார் என்பதும், ஏல அறிவிப்பில் தன்னை விட கூடுதல் விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதும், டெண்டர் பெட்டி இருந்த அறைக்கு வெளியில் சம்பந்தமில்லாத வெளி ஆட்கள் இருந்து கொண்டு ஏலம் நடக்கும் அறைக்குள் தன்னை அனுமதிக்காமல் ஆபாசமாக திட்டி மிரட்டல் விடுத்ததால் மனுதாரர் வெளியேறியுள்ளார் என்பதும், ஏல நடவடிக்கை சட்ட விரோதமானது என்பதும், புகார் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்தில் அறியவருகிறது.

நகராட்சியின் மூலம் கட்டப்பட்டுள்ள தமிழ் தென்றல் திரு.வி.க.தினசரி காய்கறி வியாபார சந்தையில் உள்ள கடைகளில் வியாபாரம் செய்வோரிடம் கட்டணம் வசூல் மற்றும் நுழைவாயில்களில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் இனத்திற்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம் தினசரி நாளிதழில் 23.04.2025 அன்று பிரசுரம் செய்யப்பட்டுள்ளது என்பதும், 08.05.2025 முற்பகல் 11.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டு அன்று காலை 11.00 மணிக்கு பூட்டி சீலிடப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டி ஏலம் நடத்தும் அலுவலரால் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ள நபர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டுள்ளவர்களிடம் வருகை பதிவேட்டில் கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்பதும், ஏல முறைகேடு தொடர்பாக மனுதாரரால் மாண்பமை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதால், மாண்பமை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி மனுதாரருக்கு திருப்பி வழங்க வேண்டிய ஒப்பந்தப்புள்ளி முன்பணம் ரூ.7,00,000/– வழங்கப்பட்டுள்ளதும் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் பொள்ளாச்சி நகராட்சி வருவாய் அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர் (பொறுப்பு) வாக்குமூலங்களிலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில், மனுதாரரின் ஒப்பந்தப்புள்ளித் தொகையை விட கூடுதல் தொகை அளித்த ஒப்பந்ததாரருக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்து மனு செய்ய ஏலப் பொது விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளவாறு மனுதாரர் 24 மணி நேரத்திற்குள் விருப்பக்கடிதத்தினை வழங்கி முந்தைய ஏலத்தொகையுடன் 25% சேர்த்து வங்கி வரைவோலை சமர்ப்பிக்காமலும், ஆணையரிடமோ அல்லது ஏலம் நடத்தும் அலுவலரிடமோ ஒப்பந்தப்புள்ளி குறித்து எவ்வித முறையீடும் அன்றைய தினம் தெரிவிக்காததாலும், பொள்ளாச்சி நகராட்சியினரால் சமர்ப்பிக்கப்பட்ட CCTV Footage–ஐ ஆய்வு செய்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், மனுதாரரால் தொடரப்பட்ட வழக்கு W. P.No. 23451 of 2025 and W.MP.Nos. 26317 and 26319 of 2025–மீது 24.07.2025 நாளிட்ட தீர்ப்பில் மனுதாரரை ஏலத்தில் கலந்து கொள்ள தடுக்கப்பட்டதாக கூறுவது நிரூபணமாகவில்லை என தெரிவித்து, ஏல வைப்புத் தொகை ரூ.7,00,000/–ஐ மனுதாரருக்கு திருப்பி வழங்க ஆணையிட்டு, வழக்கு தள்ளுப்படி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, மனுதாரருக்கு மேற்கண்ட ஆணையின்படி ஏல வைப்புத் தொகை திரும்ப அளிக்கப்பட்டுள்ளதாக பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் பொள்ளாச்சி நகராட்சி வருவாய் அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர் (பொறுப்பு) வாக்குமூலங்களில் தெரிவித்திருப்பதனை ஏற்று மனுதாரரின் புகார் மனு மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 31–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. P. தர்மலிங்கம்,
த/பெ. பழனியப்பன்,
எண்.19/51, ACMA மில் வீதி,
பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
பொள்ளாச்சி நகராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.